# தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா

11 ஆம் பக்கத் தொடர்ச்சி

## Symposium in English (ஆங்கில கருத்தரங்கங்கள்)

**பொறுப்பு அணி : மருத்துவ அணி**

- மண்டல வாரியாக மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டக் கழகச் செயலாளர்களின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டில் வேலூர், திருச்சி, கோவை, காஞ்சிபுரம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செப்டம்பர் முதல் ஜனவரி மாதம் வரை மாதத்திற்கு ஒரு மண்டலத்தில் ஆங்கில கருத்தரங்கத்தை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.
- டெல்லி உட்பட பிற மாநிலங்களிலும் நடத்தலாம்.
- ஆங்கில கருத்தரங்கம் நடைபெறும் இடம் மற்றும் பங்குபெறும் சிறப்பு விருந்தினர்கள் குறித்த பட்டியலை செப்டம்பர் மாதத்திற்குள் இறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பவேண்டும்.
- கருத்தரங்கங்களில் திராவிடக் கொள்கைகளை மக்களுக்கு கொண்டு சேர்க்கும் வகையில் திராவிட கருத்தியல் கொண்ட சான்றோர்களை அழைத்து பங்குபெற வைக்கவேண்டும்.
- கருத்தரங்கம் குறித்த விளம்பரத்தினை பதாகைகள், சுவரொட்டிகள், செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் ஒலிபெருக்கி அறிவிப்புகள் போன்றவற்றின் மூலம் நிகழ்ச்சிக்கு ஒருவாரத்திற்கு முன்பாக மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும்.
- இந்நிகழ்வினை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் தொலைக்காட்சி சேனல்கள், வலைதளங்கள் மூலமாக நேரலை ஒளிபரப்பிற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.
- கருத்தரங்கத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் திராவிட சான்றோர்களை கௌரவப்படுத்த வேண்டும்.

## மருத்துவ உதவிகள், இலவச மருத்துவ முகாம் மற்றும் இரத்ததானம்

**பொறுப்பு அணி : மருத்துவ அணி**

- அண்ணா பிறந்தநாளன்று மருத்துவ அணி சார்பாக ஊரக பகுதிகளில் உள்ள பொது சுகாதார நிலையங்களுக்கு தேவைப்படும் கூடுதல் வசதிகளை செய்து கொடுக்குமாறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும்.
- அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒவ்வொரு கழக ஒன்றியத்திலும் இலவச மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு ஆகஸ்ட் மாதத்தில் நடத்திட வேண்டும்.
- கழக மாவட்டந்தோறும் அக்டோபர் மாதத்தில் இரத்ததான முகாம்களை நடத்திடவேண்டும்.
- இலவச மருத்துவ முகாம் நடைபெறும் இடம் மற்றும் தேதியினை இறுதி செய்து அந்தப் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- மருத்துவ முகாம் குறித்து அந்தப் பகுதிகளில் சுவரொட்டிகள் மூலமாகவும் ஒலிபெருக்கிகள் மூலமாகவும் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே விளம்பரங்கள் செய்யப்பட வேண்டும்.
- முதியவர்கள் மற்றும் நடக்க இயலாதவர்களை அழைத்துவர தகுந்த ஏற்பாடுகளை செய்யவேண்டும்.
- முகாம்களில் பயனடைந்தோர் குறித்த தகவல்களைச் சேகரித்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- இரத்ததான முகாம் குறித்த விளம்பரங்கள் ஒரு வாரத்திற்கு முன்பாகவே வெகு மக்களை சென்றடையும் விதமாகவும் (சுவரொட்டிகள், ஒலிப்பெருக்கி அறிவிப்புகள், சமூக வலைதள விளம்பரங்கள்), இரத்த தானத்தின் பயன்கள் மற்றும் தேவைகள் குறித்ததாகவும் இருக்க வேண்டும்.
- இரத்ததான முகாம்களில் பங்குபெறுவோருக்கு முதல்வரின் கையொப்பமிடப்பட்ட சான்றிதழுடன் சத்தான உணவும், பழங்களும் வழங்கப்படவேண்டும்.

## தலைவர் கலைஞர் அவர்களின் இலக்கியங்கள் குறித்து தமிழறிஞர்கள் கலந்து கொள்ளும் ஆய்வரங்கங்கள்

**பொறுப்பு அணி : இலக்கிய அணி**

- மதுரை, கோவை சென்னை ஆகிய இடங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் இலக்கியங்கள் குறித்து ஆய்வரங்கங்களுக்கான இடம், தேதி, கலந்து கொள்ளும் தமிழ் அறிஞர்கள் அடங்கிய பட்டியலை ஆகஸ்ட் மாதத்திற்குள் இறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- ஆய்வரங்கத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்கு திட்டங்களினால் தமிழகம் அடைந்த வளர்ச்சி குறித்த ஆவணங்கள் செப்டம்பர் மாதம் முழுதும் காட்சிப்படுத்த வேண்டும்.
- ஆய்வரங்கம் குறித்த விளம்பரங்களை சுவரொட்டிகள், பதாகைகள், செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்களின் வாயிலாக பொதுமக்களை சென்றடைய செய்யவேண்டும்.
- நிகழ்ச்சியின் முடிவில் கலந்துகொள்ளும் நபர்களுக்கு தலைவர் கலைஞர் அவர்களின் படைப்பில் உருவான இலக்கியப் புத்தகங்களை வழங்கிட வேண்டும்.

## தலைவர் கலைஞர் அவர்களின் படைப்புகள் குறித்து கல்வியாளர்கள் பங்கேற்கும் சொல்லரங்கம்

**பொறுப்பு அணி : இலக்கிய அணி**

- திருச்சி, மதுரை, சேலம் ஆகிய இடங்களில் தலைவர் கலைஞர் அவர்களின் படைப்புகள் குறித்து சொல்லரங்கம் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும்.
- இந்நிகழ்ச்சியின் தேதி, இடம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்கும் தேர்ந்த கல்வியாளர்களின் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு செப்டம்பர் முதல் வாரத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.
- சொல்லரங்கம் நடைபெறும் அரங்கம் முழுதும் தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குத் திட்டங்களினால் தமிழகம் அடைந்த வளர்ச்சி குறித்த விளக்கங்களை காட்சிப்படுத்த வேண்டும்.
- சொல்லரங்கத்தினை தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்கு செய்த மகத்தான பங்களிப்பை விளக்கும் தலைப்புகளில் நிகழ்ச்சியை நடத்திட வேண்டும்.
- சொல்லரங்கம் குறித்த விளம்பரங்களை சுவரொட்டிகள், பதாகைகள், செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்களின் வாயிலாக பொதுமக்களை சென்றடைய செய்ய வேண்டும்.
- நிகழ்ச்சியின் முடிவில் கலந்துகொள்ளும் நபர்களுக்கு தமிழக கல்வி வளர்ச்சியில் தலைவர் கலைஞர் அவர்களின் பங்களிப்பை தொகுத்து வழங்கிட வேண்டும்.

## தலைவர் கலைஞர் அவர்கள் திரைக்கதை - வசனம் எழுதிய திரைப்படங்களை மாவட்டந்தோறும் காட்சிப்படுத்துதல்

**பொறுப்பு அணி : கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை**

- அனைத்து நகரங்களிலும் திரைப்படங்களை காட்சிப்படுத்துவதற்கான பூங்காக்கள், பேருந்து நிலையங்கள், மைதானங்கள் போன்ற பொது இடங்களை தேர்வு செய்து ஆகஸ்ட் 2023 முதல் ஜூன் 2024 வரை திரையிட வேண்டும்.
- திராவிடக் கொள்கைகள் சார்ந்த வசனங்கள் அடங்கிய தலைவர் கலைஞர் அவர்களின் திரைக்கதை, வசனம் எழுதிய திரைப்படங்களை தேர்வு செய்ய வேண்டும்.
- திரைப்படங்களை காட்சிப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை ஏற்பாடு செய்து மாலை நேரத்தில் திரைப்படங்களை காட்சிப்படுத்த வேண்டும்.
- திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்படும் நேரங்களில் பெண்ணுரிமை, சனநாயகம், சமூகநீதி குறித்த வசனங்கள் மற்றும் கழக அரசின் சாதனைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை வழங்க வழிவகை செய்ய வேண்டும்.

## கலைஞர் எழுதிய திரைப்பட வசனங்கள் மற்றும் கவிதை ஒப்பித்தல்

**பொறுப்பு அணி : கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை**

- மாவட்டம் தோறும் பள்ளிகளில் கலைஞர் அவர்களின் திரைப்பட வசனம் மற்றும் கவிதை ஒப்பித்தல் போட்டிகள் நடத்துவது குறித்து சுற்றறிக்கையை ஆகஸ்ட் மாதம் மூன்றாம் வாரத்திற்குள் அனுப்ப வேண்டும்.
- கலைஞர் அவர்களின் திரைப்பட வசனம் மற்றும் கவிதை ஒப்பித்தல் ஆகிய போட்டிகளுக்கான தலைப்புகள், போட்டி நடைபெறும் இடம், தேதி போன்றவற்றை இறுதி செய்து அந்தப் பட்டியலை ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும்.
- செப்டம்பர் மாதத்தில் பள்ளிகள் அளவிலான போட்டிகளை நடத்தி, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான போட்டிகளை செப்டம்பர் மாதம் இறுதிக்குள் நடத்திட வேண்டும்.
- மாவட்ட வாரியாக வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாநில அளவிலான போட்டிகளை நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்திற்குள் நடத்தி அதில் பங்குபெறச் செய்ய வேண்டும்.
- மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளைக் கழகத் தலைவர் மூலம் வழங்க வேண்டும்.

## கலைஞர் சுடர் ஏந்தி தொடர் ஓட்டம்

**பொறுப்பு அணி : விளையாட்டு மேம்பாட்டு அணி**

- அண்ணா அறிவாலயத்தில் தொடங்கி 38 மாவட்டம் வழியாக 100 நாட்களில் தமிழகம் முழுவதும் கலைஞர் சுடர் ஏந்தி தொடர் ஓட்டம் கலைஞர் கோட்டம் சென்று முடியுமாறு நடத்திட வேண்டும்.
- தமிழ்நாடு முழுவதும் சுடர் ஓட்டத்திற்கான வழித்தடங்களை உறுதி செய்ய வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் கலைஞர் நினைவுகளை வெளிப்படுத்தும் இடங்கள் அனைத்திலும் கலைஞர் சுடர் ஏந்துமாறு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
- மாவட்டம் வாரியாக, தொடர் ஓட்டத்திற்கான கால அட்டவணையை உறுதி செய்ய வேண்டும்.
- மாவட்டந்தோறும் சுடர் ஓட்டத்தில் பங்குபெறுவோர்களின் இறுதி பட்டியலை உறுதி செய்ய வேண்டும்.
- ஓட்டத்தில் பங்குபெறுவோர்களுக்கு கலைஞர் அவர்களின் புகைப்படம் பொருந்திய TShirts வழங்கப்பட வேண்டும்.
- தொடர் ஓட்டத்தின் போது கலைஞரின் சாதனைகளை ஒலி நாடாக்கள் (Tape) மற்றும் காணொளி வாகனங்கள்(LED video vans) மூலமாக பொதுமக்களுக்கு நினைவூட்ட வேண்டும்.
- கோட்டம் சென்றடையும் வரை கழக உறுப்பினர்கள், அவர்களுக்கு தேவையான அடிப்படைத் தேவைகளை, பூர்த்தி செய்து ஒத்துழைப்பு நல்க வேண்டும்.
- கலைஞர் கோட்டம் சென்றடைந்த பிறகு, நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்து, மாவட்டந்தோறும் சுடர் ஏந்தி வந்த நபர்களை கௌரவிக்க வேண்டும்.

## மாவட்டம் வாரியாக விளையாட்டு போட்டிகள்

**பொறுப்பு அணி : விளையாட்டு மேம்பாட்டு அணி**

- மாநிலம் முழுவதும் நடத்தப்பட ஏதுவாக 5 போட்டிகளை ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்திற்குள் இறுதி செய்ய வேண்டும்.
- மாவட்டங்களில் போட்டிகள் நடைபெறும் மைதானங்கள், போட்டிகளுக்கான அட்டவணைகள், நடுவர்கள், போட்டிகளுக்கான விதிமுறைகள் ஆகியவற்றை ஆகஸ்ட் மாதத்திற்குள் இறுதி செய்ய வேண்டும்.
- போட்டிகள் நடைபெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே விளையாட்டு மைதானங்கள் மற்றும் பொது இடங்களில் விளம்பரப் பதாதைகள் வைக்க வேண்டும்.
- கழக மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும், பேரூர்களிலும், நகரங்களிலும் அக்டோபர் மாதத்திற்குள் போட்டிகள் நடத்தப்பட்டு முடிவுகளின் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- மாவட்ட அளவில் போட்டிகள் நவம்பர் மாதத்திற்குள் நடத்தப்பட்டு, அதில் வெற்றிபெற்ற அணிகளை தேர்வு செய்து முடிவுகளின் பட்டியலை தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளும், பங்குபெற்ற அனைவருக்கும் சான்றிதழ்களும் வழங்கப்பட வேண்டும்.
- மாநில அளவிலான போட்டிகள் சென்னையில் டிசம்பர் மாதத்திற்குள் நடத்தி முடிக்கப்பட்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் மூலம் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட வேண்டும்.

## சட்டத்துறை சார்பில் பேச்சுப் போட்டிகள்

**பொறுப்பு அணி : சட்டத் துறை**

- தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து சட்ட கல்லூரிகளில் சட்டத்துறை சார்பாக பேச்சுப் போட்டிகள் நடத்துவதற்கான சுற்றறிக்கையை செப்டம்பர் முதல் வாரத்திற்குள் அனுப்ப வேண்டும்.
- கல்லூரி அளவிலான போட்டிகள் செப்டம்பர் மாதத்திற்குள் முடித்து இறுதி போட்டியாளர்களை தேர்வு செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பவேண்டும்.
- கல்லூரிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான இறுதிப் போட்டியை டிசம்பர் மாதம் 6ஆம் தேதி அம்பேத்கர் நினைவு தினத்தன்று சென்னையில் பிரம்மாண்டமாக நடத்த வேண்டும்.
- வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் தகுந்த பரிசுகளை தலைவர் அவர்கள் வழங்கவேண்டும்.

## கல்லூரிகளில் நடத்தப்படும் நிகழ்வுகளான கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம்

**பொறுப்பு அணி : பொறியாளர் அணி**

- பொறியியல் கல்லூரிகளில் கவியரங்கம், கருத்தரங்கம், பட்டிமன்றம் ஆகியவற்றுக்கான தலைப்புகளையும், நிகழ்ச்சி நடத்தப்படும் கல்லூரிகளையும் தேர்வு செய்து சுற்றறிக்கை அனுப்ப வேண்டும்.
- கல்லூரிகளில் போட்டிகள் நடத்தப்பட்டு , அதில் வெற்றி பெற்ற மாணவர்களை (கல்லூரிக்கு ஒருவர்) மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு ஆகஸ்ட் இறுதி வாரத்திற்குள் பரிந்துரை செய்ய வேண்டும்.
- மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு (மாவட்டத்திற்கு ஒருவர்), அதில் வெற்றிபெற்றவர்களை, செப்டம்பர் மாதத்தில் மாநில அளவிலான போட்டிகளுக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.
- மாநில அளவில் போட்டிகள் சென்னையில் நடத்தி, செப்டம்பர் இறுதி வாரத்திற்குள் அதில் வெற்றியாளர்களை தேர்வு செய்ய வேண்டும்.
- போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட வேண்டும்.

## கலை இரவு

**பொறுப்பு அணி : வர்த்தகர் அணி**

- தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 5 இடங்களில் (தூத்துக்குடி, மதுரை, கோவை, திருச்சி, வேலூர்) தலைவர் கலைஞர் அவர்களின் சாதனைகளை விளக்கும் வகையில் தமிழர்களின் பாரம்பரிய நிகழ்ச்சிகளை அக்டோபர் முதல் பிப்ரவரி இறுதிக்குள் கலை இரவாக நடத்திட வேண்டும்.
- கலை இரவு நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான தேதிகள் மற்றும் இடங்களை இறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளான பறை ஆட்டம், சிலம்பாட்டம், கோலாட்டம், வில்லுப்பாட்டு மற்றும் நாடகங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும்.
- சிறப்பு விருந்தினர்களாக கலைத்துறை சார்ந்த சான்றோர்களை அழைத்து பாரம்பரிய கலைஞர்களை கௌரவிக்கவேண்டும்.
- கலை இரவு நிகழ்ச்சிகள் குறித்த விளம்பரங்களை சுவரொட்டிகள், பதாகைகள், செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்களின் வாயிலாக ஒரு மாதத்திற்கு முன்னதாகவே பொது மக்களை சென்றடைய செய்யவேண்டும்.
- நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும்.

## மாவட்டந்தோறும் திரைப்படக் கலைஞர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள்/கருத்தரங்குகள்

**பொறுப்பு அணி : தொண்டர் அணி**

- வருவாய் மாவட்ட வாரியாக மாவட்டச் செயலாளர்கள் ஒருங்கிணைந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் திரைப்படக் கலைஞர்களின் பட்டியல், நிகழ்ச்சிகளுக்கான தேதி மற்றும் இடம் ஆகியவற்றை உறுதி செய்து ஆகஸ்ட் மூன்றாம் வாரத்திற்குள் தலைமைக் கழகத்தில் சமர்பிக்க வேண்டும்.
- நிகழ்ச்சி குறித்த அறிவிப்பினை பதாகைகள், சுவரொட்டிகள், ஒலிபெருக்கிகள் மற்றும் சமூக வலைதளங்கள் மூலமாக மாவட்டம் முழுதும் நிகழ்ச்சிக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாகவே விளம்பரப் படுத்த வேண்டும்.
- திராவிடக் கொள்கைகள் மற்றும் திராவிடமாடல் அரசின் சாதனைகளை வெளிப்படுத்தும் வண்ணமாக நிகழ்ச்சி/கருத்தரங்கின் தலைப்பினை தேர்ந்தெடுக்க வேண்டும்.
- கலந்து கொள்ளும் பொதுமக்களிடம் திராவிட கொள்கைகள் மற்றும் திராவிடமாடல் அரசின் சாதனைகள் குறித்த துண்டுப் பிரசுரங்களை வழங்கப்பட வேண்டும்.

## அயலக அணியின் சார்பில் தமிழர்கள் வாழும் வெளிநாடுகளில் கருத்தரங்கம்

**பொறுப்பு அணி : அயலக அணி**

- தமிழர்கள் வாழும் அனைத்து வெளிநாடுகளில் உள்ள அயலக அணி பொறுப்பாளர்கள் மூலம், கருத்தரங்கம் நடத்துவதற்கான நேரம் மற்றும் இடத்தினை அந்தந்த நாட்டின் விடுமுறை நாட்களுக்கு ஏதுவாக தேர்வு செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- அந்தந்த நாட்டில் வாழும் தமிழர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் கருத்தரங்கம் குறித்த விளம்பரங்களை பகிர வேண்டும்.
- கருத்தரங்கத்தின் தலைப்பினை கலைஞர் நூற்றாண்டு கொண்டாட்டத்தினை வெளிப்படுத்தும் விதமாக தேர்வு செய்ய வேண்டும்.
- கருத்தரங்கத்திற்கு திராவிட இயக்க சிந்தனையாளர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைத்து நிகழ்ச்சியினை நடத்த வேண்டும்.
- கருத்தரங்கில் கழக அயலக அணியில் இருந்து கொண்டு அந்நாட்டுவாழ் தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண உதவிய சிறந்த பொறுப்பாளர்களைத் தேர்வு செய்து கௌரவிக்க வேண்டும்.
- ஒவ்வொரு நாட்டிலும் உள்ள அயலக அணிக்கு தனித்தனியாக சமூக வலைதள பக்கங்களை தொடங்கி கலைஞர் நூற்றாண்டு நிகழ்வுகளை பதிவிட வேண்டும்.

## மரம் நடுதல்

**பொறுப்பு அணி : சுற்றுச்சூழல் அணி**

- ஒவ்வொரு கழக மாவட்டத்திலும் உள்ள கழக சுற்றுச்சூழல் அணி உறுப்பினர்கள் மூலம் ஒவ்வொரு கழக அமைப்பிலும் குறைந்தபட்சம் 1000 மரக்கன்றுகள் நடுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
- மரம் நடுவதற்கான இடங்களை தேர்வு செய்து தேவையான மரக்கன்றுகள் குறித்த நேரத்தில் கிடைக்க பெறுமாறு ஏற்பாடுகள் செய்திட வேண்டும்.
- பொதுமக்கள் பெருமளவில் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்